மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.221/2018</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜு | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>08.08.2025 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்று சொன்னால் சரிதான். என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தையும், அதற்கு தகுந்தார் போல் என்ன சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற விபரத்தையும் வாதி தான் எனக்கு சொன்னார் என்றால் சரிதான்.

2. என் தாயார் கிருஷ்ணசாமி செட்டியார் என்பவரின் உடன் பிறந்த சகோதரி என்று நான் சொல்லி உள்ளதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. கிருஷ்ணசாமி செட்டியார் என்பவரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் அவர் பெயரும் கிருஷ்ணசாமி செட்டியார் தான்.

3. கிருஷ்ணசாமி செட்டியாரின் தாயார் பெயர் தாயம்மாள். மேற்படியார் இருவரும் உயிரோடு இல்லை என்றால் சரிதான். மேற்படியாருக்கு எனது தாயார் வாரிசு என்பதை காட்ட மேற்படியார்களின் வாரிசு சான்றிதழை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் நான் கிருஷ்ணசாமி செட்டியார் என்பவரின் சகோதரியின் மகன் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

4. கிருஷ்ணசாமி செட்டியார் கிரயம் வாங்கிய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். கிருஷ்ணசாமி செட்டியார் என்பவரின் வாரிசுகளான மல்லம்மாள், பூங்கொடி மற்றும் மனோகரன் ஆகியோர்களிடம் இருந்து 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணங்கள் குறித்து எந்த விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம்.

5. மேற்படி கிரைய ஆவணங்களை குறித்து எனக்கு தெரியும் என்று நான் வாதி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி 1ம் பிரதிவாதி சுப்பிரமணியம் என்பவரிடம் சொத்துக்களை பாகம் பிரித்து தர சொல்லி எந்த தேதியில் கேட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. வாதிக்கு தாவா சொத்துக்களில் எவ்வித பங்கும் இல்லாததால் அவர் எந்த காலத்திலும் 1ம் பிரதிவாதியிடம் பாகம் பிரித்து தர சொல்லி கேட்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6. தாவா சொத்துக்களை வாதி கூட்டாக அனுபவித்து வருவதாக நான் சொல்லியுள்ளதை பொறுத்து நான் எந்த ஆவணங்களையும் பார்க்கவில்லை என்றும் அதை வாதி சொன்னதன் அடிப்படையில் நான் சொல்கிறேன் என்றும் சொன்னால் ஆமாம். தாவா சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும் வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருவதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7. வாதி கிருஷ்ணசாமி செட்டியாரின் மகள் அல்ல என்றும், நான் கிருஷ்ணசாமி செட்டியாரின் சகோதரியின் மகன் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் வாரிசு உரிமையை காட்டவும் உறவுமுறையை காட்டவும் நான் எந்த விதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் வாதியால் பயிற்றுவிக்கப்பட்ட சாட்சி என்றும், எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.08 18:31:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்